அது மட்டுமன்றி தமிழகத்தில் உள்ள அனைத்து அகதி முகாம்களிலும் பெப்ரவரி மாதம் முதல் வங்கிகள் ஊடாக அகதி உதவிப்பணம் (ATM கார்டுகள் மூலமாக) வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் அவர்களுக்கான வங்கிக் கணக்குகளும் தொடங்கப்படுகின்றன. இதனால் தமிழக முகாம்களில் வாழும் அகதிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

முகாமில் வாழும் ஈழத் தமிழ் அகதிகள் படும் துயரங்களை, சுரண்டல்களை சுட்டிக் காட்டி, இந்த விடயங்களில் அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரடியாகத் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக் காட்டி இருந்தோம். அதன்படி உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு தமிழ் சி.என்.என் செய்தி வலையமைப்பு சார்பில் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

தமிழ்நாட்டில் அகதிகளின் நிலமை களை தமிழ் சி.என்.என் தொடர்ந்து கண்காணிக்கும்.

# The 24 years of plight of the refugees in Tamil Nadu has ended due to the Tamilcnn exposed news

On every month of 7th the authorities should give the aid to the refugees but they do not give and do rowdyism (with all the refugee money they earn interest by giving to the required party). And at 27th and 28th will give to the refugees.

On last year December 30th, the Tamilcnn website published the detail report of the suffering of Devakottai Refugee camp in Sivaganga district of Tamil Nadu. As result of this, what never happened in 24 years in Devakottai refugee camp took place. On 2.1.2014 itself they recieved their relief amount.

Not only that but by February in all the refugee camps in Tamil Nadu the government stopped providing benefits through RI authorities. All the refugee assistance was provided through the bank (ATM card) by the government. Bank accounts were opened for the refugees and the people living in the refugee camps in Tamil were happy.

Also while exposing the exploitation and suffering of the Eelam Tamil in Devakottai camp, a request was also made that the current Chief Minister Jayalalithaa should personally intervene in this matter and take immediate actions.

Tamilcnn on behalf of the network thanked the Tamil Nadu Chief Minister Jayalalithaa for taking the timely actions according. Tamilcnn will continue to monitor the situations of refugees in Tamil Nadu.

# வாழ்வாதாரத்தை இழந்த குடும்பத்துக்கு கோழிக்கூண்டு அமைக்க நிதியுதவி

தமிழ் சி.என்.என் இன் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் செயற்திட்டத்தின் கீழ் கற்குளம் நெடுங்கேணியைச் சேர்ந்த குடும்பமொன்றுக்கு கோழிக் கூண்டு அமைப்பதற்கு தேவையான நிதி உதவியை தமிழ் சி.என்.என் இன் இயக்குனர் சபையின் ஆலோசனையின் படி குறித்த உதவியினை வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், தமிழ் சி.என்.என் இன் நிர்வாக இயக்குனரான அகிலன் அவர்களும் இணைந்து குறித்த குடும்பத்திடம் நேரடியாக வழங்கினர். கற்குளம் நெடுங்கேணியைச் சேர்ந்த ரத்தினம் ரகுபிரியா (மகள்), சின்னம்மா (தாய்) ஆகியோரிடமே மேற்படி உதவி வழங்கி வைக்கப்பட்டது.



## Tamilcnn provided aid for setting up of poultry farm

Tamilcnn under its scheme of providing help to people who have lost their livelihood, offered financial assistance for establishment of poultry farm for the family who have lost their livelihood and residing in Nedunkeni Karkulam.

At the request from Karkulam Rural Resource Centre, Vanni Cross Health Organization and with the advice from the Tamilcnn Director Board, the Northern Provincial Board Members Dr. C.Sivamohan along with Tamilcnn's executive director Mr.Ahilan directly handed over the assistance to the family. The assistance was recieved by Rathinam Ragrupriya (daughter) and Chinnamma (mother) resident of Karkulam Nedunkeni. Ragupriya at the age of 11 suffered from brain fever because of that she lost hearing capibility and also has trouble speaking.



# தமிழ் மக்களின் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்த தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவால் நிகழ்ச்சித் திட்டம்

தமிழ் சி.என்.என் இன் இயக்குனர் திரு அகிலனின் சிந்தையில் உதித்த சிறப்பான செயற்த்திட்டமே இது. போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரங்களை அடியோடு இழந்த எம் மக்கள் இன்று வறட்சியும், வறுமையும் ஒரு சேரத் தாக்க கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தனர். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக எல்லாப் பக்கத்தாலும் கஷ்டப்பட்டு பட்டினியால் வாடும் அந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக அரிசிப் பொதி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பட்டினியால் கஷ்டப்படும் ஒவ்வொரு ஏழை வீட்டு வாசலையும் அரிசிப் பொதிப் பக்கெட்டுக்கள் போய்ச் சேர வேண்டும் என்பதற்கிணங்க அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் ஏராளமானோர் தாமாக முன்வந்து அரிசிப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர். இதுவரை2000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 20 000 கிலோவுக்கும் மேல் அரிசிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று பல தரப்பட்டோரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இனிவருங் காலங்களில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பசி, பட்டினியால் எந்தவொரு மரணங்களும் எம் தாயகப் பகுதியில் இடம்பெறக் கூடாது என்பதற்காக முன்னெடுக்கப்படும் இத்திட் டத்தில் இன்னும் ஏராளமானோரை உள்ளீர்க்கும் வகையிலேயே கனடாவில், உள்ள(த்)தில் இருந்து ஒரு துளி என்னும் இந்த விசேட மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# The road of success so far travelled by the Tamilcnn's Rice bag project

Three months back Tamilcnn director Mr. Ahilan initiated the Rice Bucket Challenge scheme. Under this scheme so far more than 30,000 kgs of rice has been provided and more than 3,000 families who lost their livelihood have benefited from this is well know to all.

Today the people affected severely by war have completely lost their livelihood and they are unable to recover from it and are still suffering. In this situation, even drought and poverty have not spared them. Hence they are going through multiple sufferings.

All those people who are suffering are our relations only. So atleast one pack of rice should reach the doors of families who have lost their livelihood and suffering. This is our only goal. Every person regardless of any ethnic, religion, language or party affiliation can take part in this Rice Bucket Challenge.

Diaspora relations interested to participate in this challenge,

Diaspora could take up this challenge by providing Rice packets to the affected people directly or through their relations at hometown. After accomplishing this challenge they can email regarding this to us, so that it will be convenient for us to publish it.

Diaspora people who wish to participate in this challenge and do not have relations in hometown can send money to the bank account given below. Then we will purchase the Rice packages on your behalf and we will provide it to the needed families. We would be very grateful, if one person provides enough rice packages (10 kg per family) to atleast five families.

# என் உள்ளத்தில் இருந்து ஒரு துளி

## தமிழ் மக்களின் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்த தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவால் நிகழ்ச்சித் திட்டம்



தமிழ் சி.என்.என் இன் நிர்வாக இயக்குனர் திரு அகிலன் முத்துக்குமாரசாமி சிந்தையில் உதித்த சிறப்பான செயற்திட்டமே இது. போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரங்களை அடியோடு இழந்த எம் மக்கள் இன்று வறட்சியும், வறுமையும் ஒரு சேரத் தாக்க கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தனர். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக எல்லாப் பக்கத்தாலும் கஷ்டப்பட்டு பட்டினியால் வாடும் அந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக அரிசிப் பொதி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நான் யாழ் மாவட்டத்தில் பிறந்தாலும் 1990 களில் போரால் இடம்பெயர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல இடங்களில் வசித்து வந்தேன். 2000 ஆண்டுக்கு பிறகு தான் அங்கிருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்தேன். அங்கு நான் வறுமையையும், பட்டினியையும் நேரடியாக அனுபவித்து உணர்ந்ததன் தாக்கம் இது. அந்த மக்கள் ஏன் தொடர்ச்சியாக பட்டினியால் வாடுகிறார்கள். என்று நித்தமும் யோசித்ததன் விளைவாகவும் இதனைக் கொள்ளலாம். இன்றைக்கு வன்னி மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்து 90,000 குடும்பங்களுக்கு மேல் வாடுகின்றார்கள். (அதில் ஏராளமானோர் விதவைகள்.) அவர்கள் படும் துன்ப துயரங்களை சொற்களால் விளக்க முடியாது. அவர்களில் 3000 குடும்பங்களுக்கு மேல் தமிழ் சி.என்.என் உதவி இருக்கிறது. (ஆயிரத்துக்கு மேற்பட்ட போரில் உயிர்நீத்தவர்கள், முன்னாள் போராளிகளின் குடும்பங்கள்) அங்கு பட்டினியால் வாடும் அனைத்து மக்களுக்கும் ஒருவேளை சாப்பிடவாவது உணவு கிடைக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கை அடிப்படையாகக் கொண்டு தான் தமிழ் சி.என்.என் இன் அரிசிப் பொதித் திட்டத்தை ஆரம்பித்தோம். இதற்கு நிச்சயம் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தங்கள் ஆதரவைத் தருவீர்கள் என்று நம்புகின்றோம்.

பட்டினியால் கஷ்டப்படும் ஒவ்வொரு ஏழை வீட்டு வாசலையும் அரிசிப் பொதிப் பக்கெட்டுக்கள் போய்ச் சேர வேண்டும் என்பதற்கிணங்க அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் ஏராளமானோர் தாமாக முன்வந்து அரிசிப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர். இதுவரை 3000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 30 000 கிலோவுக்கும் மேல் அரிசிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று பலதரப்பட்டோரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இனிவருங் காலங்களில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பசி, பட்டினியால் எந்தவொரு மரணங்களும் எம் தாயகப் பகுதியில் இடம்பெறக் கூடாது என்பதற்காக முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தில் இன்னும் ஏராளமானோரை உள்ளீர்க்கும் வகையில் உள்ள(த்)தில் இருந்து ஒரு துளி என்னும் விசேட மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி இடம்பெற்று, அரிசிப் பொதி வழங்கும் திட்டத்தினை மென்மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் கென் கிருபா தலைமையில் புதியதோர் அமைப்பு உருவாக்கப்பெற்றுள்ளது. இதன் ஊடாக இத்திட்டம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. பசி இல்லாத உலகை (Hunger Free World) உருவாக்க அனைவரும் ஓரணியில் திரள்வோம்.

இங்கனம்,
திரு. அகிலன் முத்துக்குமாரசாமி,
நிறுவனர்.
உள்ளத்தில் இருந்து ஒரு துளி.

# A Drop of feeling from the Ocean of my Heart

## Tamilcnn Rice Bucket Challege program turned out to be a turning point in the life of Tamil people

This special program was the thinking initiated in the mind of Tamilcnn's Managing Director Mr. Ahilan Muthukumarasamy. Our people affected by war have completely lost their livelihood and they are unable to recover from it and are still suffering. In this situation, even drought and poverty have not spared them. Hence they are going through multiple sufferings. So to light up the lives of these people who are suffering due to starvation, this rice pack project was initiated.

I was born in Jaffna district and due to war in 1990 I have been displaced and been living in many places in the North and East. After 2000 only I have migrated to Canada. I experience the impact of poverty and hunger myself. Why those people are continuously suffering from hunger. Today in Vanni district about more than 90,000 families have lost their livelihood (in which many are widows). Words can not explain the hardships they face. Out of these, about to more than 3,000 families Tamilcnn has provided assistance (about thousand of the families includes that of ex-warriors). Tamilcnn initiated this program with only one goal that these people should atleast get one day food daily. And for this the diapora Tamils scattered all over the world will provide help we hope so.

Atleast one pack of rice should reach the doors of families who have lost their livelihood and suffering. Under this scheme so far more than 30,000 kgs of rice has been provided and more than 3,000 families who lost their livelihood have benefited from this.

In this program, Chief Minister, members of parliament, members of the Provincial Council and Pradeshiya members, municipal councilors, journalists, clergy, students and public with enthiasium participated.

In the coming years in the Tamil homeland regions no one should die of hunger and stravation with this and to carry out more project a special public meeting "Ullathil Irunthu Oru Thuli" (A drop out from the heart) took place. To further expand the scope of this rice pack scheme a new system was formed under the leadership of Ken Kriba. This project has been internationalized. Everyone should come together to create a Hunger Free World.

Regards,
Mr. Ahilan Muthukumarasamy,
Founder of Ullathil Irunthu Oru Thuli

## President's Message



**Ken Kirupa**
President
Hunger Free World Foundation

December 12, 2014

Friends,

I believe in the invaluable importance of safeguarding the lives of our people, language, culture and community in Sri Lanka. The 30 years of war has affected our people deeply. It is our duty, specially the Diaspora to ensure the help is available for the needy in back home.

"How wonderful it is that nobody need wait a single moment before starting to improve the world" Said Anne Frank. Tamilcnn media has taken the leadership by initiating this project "Rice Packet Challenge" to help the 90000 widows and families who needs our help.

According to the United Nations, about 21,000 people die every day of hunger or hunger-related causes. This is one person every four seconds, yet there is plenty of food in the world for everyone.

Once, Mother Teresa said, "If you can't feed a hundred people, then feed just one".
With that thought, Hunger Free World Foundation is born and I am very pleased to be part of the team and one of my goal is to help the organization to expand the services worldwide, so that we can serve the world.

There is much work to be done in this regard. We should always be on the lookout for productive, charitable leaders in our community who can help shape the future of the Foundation.
This is your community and your Foundation. Without solidarity, we cannot enhance social progress. Today I want to thank all of you who came in and supported this event "Ullaththil Irunthu Oru Thuli".

Let us all continue to do our best and to lead our community into the next phase of achievements and successes.

Sincerely,
Ken Kirupa
President
Hunger Free World Foundation

# தமிழ் சி. என். என். இன் உயிர்காக்கும் பணிக்கு என் உள்ளத்தில் இருந்து வாழ்த்தொன்று...



'' உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற முன்னோரின் கூற்றுக்கிணங்க கனடாவைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட தமிழ் சி. என். என். நடாத்தி வரும் ''அரிசிப் பொதி சவால்'' என்ற பெயரில் எமது ஈழ தாயகத்தில் வாழும் ஏழ்மையில் வாடும் கிராம மக்கள் ஒரு வேளை கூட பசியாயிருக்கக் கூடாது என்ற நல் நோக்கத்தோடு பல தடைகளையும், சிரமங்களையும் கடந்து கிராமங்கள்தோறும் சென்று வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைக் கண்டு பிடித்து, அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு சாப்பிடத் தேவையான அரிசிப் பொதிகளை இலவசமாக வழங்கி வருகின்றது. இது உண்மையிலேயே என்னுடைய உள்ளத்தைத் தொட்டது.

இது வரையிலும் இப்படி ஒரு திட்டம் யாரலும் முன்னெடுக்கப்படாததை யாவரும் அறிவோம். ஆனால் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் மொழி, இனம், மதம் வித்தியாசம் பார்க்காமல் அனைவரது பசியையும் போக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு செயலாற்றி வருவது குறித்து வியப்படைகிறேன். மேலும் இப்பணி உலக நாடுகளில் எங்கெல்லாம் மக்கள் பசியால் வாடுகிறார்களோ அங்கெல்லாம் இப்பசி தீர்க்கும் திட்டத்தை முன்னெடுக்கப் போவதாக ''அரிசிப் பொதி சவால்'' ஸ்தாபனம் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருப்பதாக அறிந்து என் உள்ளத்தால் வாழ்த்துகிறேன்.

இந்தத் திட்டத்தின் தலையங்கத்தை இரண்டு பொருள்பட பாவித்திருப்பது போற்றப்படத்தக்கது. ''உள்ள(த்)திலிருந்து ஒரு துளி'' எங்களிடம் இருப்பதிலிருந்து உளமாறக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இதன் பொருள். புலம் பெயர்ந்தவர்களில் இல்லாதவர்கள் ஒருவருமில்லை என்றுதான் கூறவேண்டும். ஆனால் எத்தனைபேருக்கு இப்படிப்பட்ட வறுமைக்குள் வாழும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற உள்ளம் இருக்கின்றது? தமிழ் சி. என். என். போன்ற ஒரு சிலருக்குத்தான். ஏறத்தாழ 2000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு திரு. அகிலன் அவர்கள் தனது சொந்தப் பணத்திலிருந்து உதவி செய்திருக்கிறார் என்பதை நினைக்கும் போது என் உள்ளம் உவகை கொள்கிறது. இதைப்போல பல ஆயிரம் கொடையாளர்களை எழுப்ப வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

என் உள்ளத்திலிருந்து ஒரு துளி!

தமிழ் சி. என். என். பிரதம ஆசிரியர் திரு. அகிலன் அவர்கள் நான் வெளியிடும் ''தளிர்'' சஞ்சிகையின் வடிவமைப்பில் கவரப்பட்டு தன்னுடைய ஆண்டு மலரையும் மிகச் சிறந்த முறையில் வடிவமைத்துத் தரும்படி கேட்டுக்கொண்டதன்பேரில், பல சிரமங்களின் மத்தியில் இலத்திரணியல் பத்திரிக்கையிலிருந்தும், மின்னஞ்சல்களிலிருந்தும், வெப்சைட்களிலிருந்தும் செய்திகளையும் மற்றும் நிகழ்வுகளின் நிழற்படங்களையும் தெரிவு செய்து தொகுத்து ஒரு முத்தாக உங்கள் கரங்களில் தமிழ் சி.என்.என் வரலாற்றுச் சுவடுகளை படைத்துள்ளேன். இதிலுள்ள நிறைவுகளை உலகத்திற்கும் குறைவுகளை எமக்கும் தெரியப்படுத்தினால் எதிர்வரும் காலங்களில் பிழைகளின்றி சஞ்சிகைகள் வெளியிட உதவியாயிருக்கும்.

இதழைப் படியுங்கள். இதற்கு ஓய்வு கொடுக்க வேண்டாம். உங்கள் நண்பர்களையும் வாசிக்கச் செய்யுங்கள். நன்றி.




சிவமோகன் சிவலிங்கம்
பிரதம ஆசிரியர்
காலாண்டு கனடிய தமிழ் ''தளிர்'' சஞ்சிகை.
(647) 657-0910

# Hunger Free World Foundationஇன் ஒழுங்கமைப்பில் உருவான உள்ள(த்)தில் இருந்து ஒரு துளி நிர்வாகக் குழுவினர்



**President**
**Mr. Ken Kirupa**
(Former President.
Tamil Chamber of Commerce)

**Vice President**
**Mrs. Marlene Gallyot**
(Social Worker & Canada Politician)

**Gen. Secretary**
**Mr. Kanagasingham Karthigesu**
(Paralegal – Accident Benefit)


**Joint Secretary**
**Mrs. Suhanthy Tharmasrirajah**
(Peel School Board)

**Treasurer**
**Mr. Akilan Muththukumarasamy**
(President - CEO. Tamil CNN)

**Joint Treasurer**
**Mr. Balan Alagaratnam**
(Community Service)

**COMMITTEE**

**Rev. Dr. Paulraj Rajapandian**
(Founder President - Kathir Oli Media Inc.)
**Mr. Nathan Sritharan**
(Barrister Solicitor – Antony-At Law)
**Dr. Kanaga Chandrasekaram**
(Dentist- MKS Dental Clinic)
**Mr. V.S. Thurairajah**
(President- Canadian Tamil Academy)
**Mr. Vin Mahalingam**
(President – Tamils Reformed Life - Canada)
**Mr. Sivamohan Sivalingam**
(Founder President "Thalir" Publication)
**Rev. Shanthikumar Kanthratnam**
(President- Cricket Team & Politician)
**Mr. Siva Kanapathypillai**
(Community Worker)
**Mr. Jeya Jeyakumar**
**Mr. Soma Satchin**
**Mr. Pudhuvai Ram**
(Freelance Writer & Journalist)
**Mrs. Kavitha Sivaruban**
( Community Worker)











Tamilcnn.com
தமிழ் FUN








Tamilcnn.com
தமிழ் FUN




Tamilcnn.com
தமிழ் FUN


Tamilcnn.com
தமிழ் FUN

உண்மைகள்
உடனுக்குடன் உலகிற்கு...
Tamilcnn
தமிழ் FUN

# A DROP OF FEELING FROM THE OCEAN OF MY HEART

# RICE PACKET CHALLENGE

**Sri Lankan parliamentarians and provincial council members, who participated in the challenge**



Nothern province chief minister
Hon. Vigneswaran



Parliamentarian
Suresh Premachchandran



Parliamentarian
Sivaskthi Ananthan



Parliamentarian
Yogeswaran



Parliamentarian
Selvam Adaikkalanathan



Parliamentarian
Vino Noharathalingam



Nothern provincial council member
Raviharan



Nothern provincial council member
C. V. K. Sivagnanam



Eastern provincial council
Opposition leader Thandauthapani



Nothern provincial council member
Sivajilingam



Notherrnp provincial council member
Dr. Sivamohan



Eastern provincial council member
Thurairasasingam

## Are you ready for the challenge?

Take the challenge, which has already helped more than 3000 families, and feed the people who are waiting to rebuild their livelihood.

# தமிழ் சி.என்.என் இன்
# ரைஸ் பக்கெட் சவால் ஆரம்பம்

ஐஸ் பக்கெட் சவால் உலகத்தை இன்னமும் கலக்கிக் கொண்டிருக்கிறது. இது ஏ.எல்.எஸ் என்னும் தன்னார்வ அமைப்பு நடத்தும் விழிப்புணர்வு சவால் ஆகும். நரம்பு சம்பந்தமான ஏ.எல்.எஸ். என்னும் நோயை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும்.

இதில் பங்கேற்பவர் ஒரு பக்கெட்டில் ஐஸ் தண்ணீரை எடுத்துக் கொண்டு அதனை அவர் மீது ஊற்றி கொள்ள வேண்டும். இதில் ஏராளமான பிரபலங்கள் பங்கேற்றனர். அமெரிக்கா, ஐரோப்பாவில் இந்த சவால் செம ஹிட்டானது. அதன் மூலம் பல மில்லியன் டொலர்கள் அந்த அமைப்புக்கு குவிந்தன.

இதே போல் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர் யுத்தத்தினால் வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களிலும், மீள்குடியேற்றப்பட்டு வறுமையிலும் சிக்கித் தவிக்கின்றார்கள்.

அவர்களின் வாழ்வில் சிறு புன்னகையை கொண்டு வருவதற்காக தமிழ் சி.என்.என் செய்தி நிறுவனம் ரைஸ் பக்கெட் சவாலை அறிமுகப்படுத்துகின்றது.

முதலில் தமிழ் சி.என்.என் செய்தி வலையமைப்பின் நிர்வாக இயக்குனர் திரு. அகிலன் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு



அரிசி பக்கெட் இனை வழங்கி சவாலினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் கொடுமையான வறட்சி வந்து ஏழை மக்களை இன்னும் வாட்டுகின்றது. இல்லாதவர்களுக்கு அரிசி கொடுப்பது ரைஸ் பக்கெட் சவாலின் நோக்கமாகும்.











## Tamilcnn's Rice Bucket Challenge begins

Ice Bucket challenge is running like a crazy all over the social website in the world. This challenge was organized by ALS organization to create awareness about this disease. In this, challenge the participants have to pour a bucket of ice from head to toes. Numerous celebrities took part in this challenge. This challenge has been a hit in United States and Eurpoean countries. Millions of dollars have been poured into this system.

Tamilcnn has initiated a Rice Bucket Challenge in Sri Lanka.

Similarly, in Sri Lanka, particularly in the northern and eastern parts the people who have lost their livelihood during the wars, these people living in camps, resettled people are living in poverty and struggling to gain their livelihood.

In order to bring smile in their faces, Tamilcnn news agency have introduced this challenge. The first challenge has been started by our Tamilcnn network's executive director Mr. Ahilan.


# தமிழ் சி.என்.என். சவாலை நிறைவேற்றிய வைத்தியகலாநிதி சிவமோகன்

தமிழ் சி.என்.என். திரு. அகிலன் அவர்களின் சவாலை ஏற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினரான திரு. வைத்தியகலாநிதி சிவமோகன் அவர்கள் வவுனியா மாவட்டம் நெடுங்கேணியில் வசிக்கும் வாழ்வாதாரத்தை இழந்த ஐந்து குடும்பங்களுக்கு தலா 10 கிலோ எடையுள்ள அரிசி பக்கெட்டுக்களை வழங்கி சவாலை வெற்றிகரமாக நிறைவேற்றினார்.


இதனைத் தொடர்ந்து வைத்தியகலாநிதி சிவமோகன் அவர்கள், வடமாகாண சபையின் அவைத்தலைவரான சி.வி.கே சிவஞானம் மற்றும் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்தச் சவாலினை நிறைவேற்றி மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வைத்தியகலாநிதிசிவமோகன்இதுபற்றிக்குறிப்பிடும்போது, "நாங்கள் தான் மக்களுக்கு முன்னுதாரணமாக வழிகாட்டியாக இருக்க வேண்டும். இது ஒரு நல்ல திட்டம். மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் முதலில் இந்தச் சவாலினை ஏற்றுச் செய்தால் தான் பின்னர் மக்களும் இதனை ஏற்றுச் செய்வார்கள். எங்களிடமே எல்லா வளமும் இருக்கும் போது, அங்கே செய்யவில்லை, அரசாங்கம் செய்யவில்லை என்று குறைகூறுவதில் பலனில்லை இந்த திட்டத்தின் மூலம் போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த ஆயிரம் ஆயிரம் மக்கள் பயனடைவார்கள் என்பது நிதர்சனம்" என்றார்.









## Dr. Sivamohan accepts the Rice Bucket Challenge presented by the Tamilcnn Executive Director Ahilan

The Tamilcnn executive director Mr. Ahilan inaugurated the Rice Bucket Challenge yesterday by provided 10kg of rice each for families who lost their livelihood.

The TNA member of the Northern Provincial Council Dr. Sivamohan accepted the challenge posed by Mr. Ahilan and successfully fulfilled the challenge. He gave 10 kg of rice bucket to 5 five families in Nandunkerny in Vavuniya who



lost their livelihood. Following this, Dr. Sivamohan requested Speaker of the Northern Provincial Council C.V.K Sivagnanam, Chief Minister Vigneswaran, all TNA parliamentarians and provincial council members to fulfill the challenge and be an inspiration for people.

# பசிப்பிணி போக்கும் தமிழ் சி.என்.என்னுக்கு நெடுமாறன் ஐயா பாராட்டு


இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் சி.என்.என் செய்தி நிறுவனத்தினால் ரைஸ் பக்கெட் சவால் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து இன்னமும் ஒருவேளை வயிற்றுப் பசிக்கே அல்லல்படும் மக்களுக்கு அரசி வழங்கி அவர்களின் வாழ்வில் சிறு புன்ன கையை வர வரவழைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டத்துக்கு உலகெங்கும் உள்ள வாசகர்கள், இலங்கையின் தமிழ் அரசியல்வாதிகள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் என்று பலரிடமும் ஆதரவு பெருகி வருகின்றது.

தமிழ் சி.என்.என் வடக்கு கிழக்கில் ஆரம்பித்து வைத்த இந்த திட்டத்துக்கு தமிழர் தேசிய முன்னணியின் தலைவரான பழ. நெடுமாறன் ஐயா அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச்செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்: வயிற்றுக்கு கூட உணவில் லாத வகையில் வறுமையில் வாடும் ஏழைகளுக்கு இலவச அரிசி தரும் திட்டம் நல்லதொரு திட்டம். பசிப்பிணியை அறவே போக்க வேண்டும் என்பதற்காக தான் மணிமேகலை அரும் பாடுபட்டார்கள் என மணிமேகலை காவியம் கூறுகின்றது. அதைப் போல் மக்களின் பசிப்பிணியை நாம் தீர்க்க வேண்டும்.

வள்ளலார் கூட, பசிப்பிணியைப் போக்கு வதற்காக நாள் தோறும் ஏராளமான ஏழைகளுக்கு உணவளிக்கும் திட்டத்தை செயற்படுத்தினார். அவர் மூட்டிய அடுப்பில் இன்னமும் நெருப்பு எரிந்து கொண்டு இருக்கின்றது. மக்களுக்கு அங்கே உணவு வழங்கப்படுகின்றது. அதே போல் ஒரு திட்டத்தை நீங்கள் வடக்கு, கிழக்கில் செயற்படுத்துவதனைக் கண்டு மகிழ்ச் சியடைகின்றேன். பசிப்பிணி போக்கும் மகத்தான தொண்டு செய்ய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள் என்று குறிப் பிட்டுள்ளார்.



## Happy to see steps and agenda to remove hunger from North and East : Nedumaran congratulates

The Tamil National Front leader P. Nedumaran congratulated the TamilCNN for starting up such a great project. The Congratulatory message as follows:

This plan of providing free rice for people under poverty line who cannot afford one time food is a very good plan. In order to alleviate hunger, one has to work hard and this can be seen in the epic poems of Manimegalai.

Similarly we have solve the issue of hunger. Vallalar also introduced a scheme for feeding poor hungry people food daily. Still today the oven he has started is providing food to poor and people in need.

I am happy to see that such plan to feed poor people is taking place in North and East of Sri Lanka. My best wishes to all for a great charity to alleviate hunger.

# ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய சிவஸ்ரீ பாஸ்கரக் குருக்கள்

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினரும், தமிழ் சி.என்.என் செய்தியாளருமாகிய அப்துல் சலாம் யாசீம் முன்வைத்த வேண்டுகோளின் படி மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவரான சிவ ஸ்ரீ இ.பாஸ்கரக் குருக்கள், தமிழ் சி.என்.என். னின் ரைஸ் பக்கட் சவாலை வெற்றிகரமாக நிறைவேற்றி னார்.

இன - மத பேதமின்றி இந்தச் சவாலினை நிறைவேற்ற முன்வர வேண்டும் என சிவ ஸ்ரீ இ.பாஸ்கரக் குருக்கள், கிழக்கு மாகாண சபை தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் திருகோண மலை நகர சபைத்தலைவர் கே.செல்வராஜா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் இச்சவாலினை விடுத் தார்.




## Hindu Gurukkal Association Chairman Sivasri Paskark gurukal accomplished the TamilCNN's Rice Bucket Challenge

In Trincomalee district, Sri Lanka Muslim Media committee member and TamilCNN reporter Abdulsalam Yasim accept the challenge and fulfilled it. According the Hindu Gurukkal Association Chairman Sivasri E. Paskarakguru sucessfully fulfilled the challenge in Muttur division.

Sivasri E. Paskarak gurukul has appealed to the Eastern Provincial Council of TNA and Trincomalee regional mayor K.Selvarajah and all regional members to participate in this challenge without ethnic-religious discriminations. He also said that we should be the role model for other people.

CGA

NIMAL VINAYAGAMOORTHY

CERTIFIED GENERAL ACCOUNTANT

THE NAME YOU NEED FOR YOUR BUSINESS

Nimal Vinayagamoorthy, CGA



Tel: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-613-2739
Email: nimal@nlraccounting.com
2525 Pharmacy Ave, Toronto, ON M1W 2K2

# திருகோணமலையில் ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய ஊடகவியலாளர் அப்துல்சலாம் யாசீம்



தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை, தமிழ் சி.என்.என் செய்தித் தளத்தின் திருகோணமலை மாவட்ட நிருபரான அப்துல்சலாம் யாசீம் ஏற்று நிறைவு செய்தார்.

திருகோணமலை மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ரொட்டவெவ முஸ்லிம் கிராமத்தில் கணவனை இழந்து ஆறு பிள்ளைகளுடன் மண் வீட்டில் வாழும் ஒரு குடும்பத்துக்கு 10 கிலோ அரிசி பக்கட்டுக்களை வழங்கி சவாலினை வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

இதனைத்தொடர்ந்து அப்துல்சலாம் யாசீம் அவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளரும் - இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவருமான டாக்டர் குணாளனுக்கு இந்த சவாலினை நிறைவேற்ற வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## Journalist Abdulsalam successfully accomplished the Rice Bucket Challenge

The TamilCNN executive director Mr. Ahilan inaugurated the Rice Bucket Challenge yesterday by provided 10kg of rice each for families who lost their livelihood.

The Trincomalee district TamilCNN news correspondent Abdulsalam Yasim accepted this challenge and finished it successfully. This Rice Bucket Challenge has created a hope and expectation in the mind of people living in poverty in Trincomalee district.

At the same time, the journalist successfully fulfilled his challenge by providing 10kg rice to a family living in Rottavewa Muslim village in Morawewa Divisional Secretariat Division in Trincomalee. This woman has lost her husband and is living with 6 children in a mud house.

After fulfilling his challenge, Abdulsalam Yasim requested Former Director of the Trincomalee general hospital and Chairman of the Sri Lanka Red Cross Society Dr. Gunalana to accomplish this challenge so that it will create an inspiration among people.

# தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற வவுனியா ஊடகவியலாளர்

தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை ஏற்ற வவுனியா ஊடகவியலாளரும், சிறந்த பேச்சாளரும், ஆசிரியரும், சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், சமூக சேவையாளருமான சிவபாதம் கஜேந்திரகுமார் அவர்கள் 10 கிலோ அரிசியினை வழங்கி, இச்சவாலினை சிறப்பாக நிறைவேற்றினார்.

கஜேந்திரகுமார் அவர்கள் வவுனியாவில் உள்ள ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு ரைஸ் பக்கெட் சவாலை விடுத்துள்ளார்.



## Vavuniya journalist participated in the TamilCNN's Rice Bucket challenge

The Vavuniya journalist, best speaker, teacher, leader of the International Hindu Youth Council, Social service worker Sivapatham Gajendrakumar accepted the challenge and fulfilled it by providing 10 kg of rice.

In order to bring smile in the face of people griped by poverty and are still struggling to make the livelihood.

More people should come forward and participate so that they can bring smile not only in Vavuniya district but also in the north and east.

# ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய பாடசாலை அதிபர்

தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை ஏற்ற யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் அரசினர் தமிழ்க் கலைவன் பாடசாலை அதிபரும், சமூகசேவையாளரும் ஆகிய ஆ. தங்கவேலு அவர்கள் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு அரிசியினை வழங்கி ரைஸ் பக்கெட் சவாலினை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்துள்ளார்.

அவர் எல்லாத் தமிழ் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் இந்தச் சவாலினை நிறைவேற்றி மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வழிகாட்ட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





# School principal not only accomplished the Rice Bucket Challenge but provide inspiration to others

The Chavakachcheri Nunavil Government Tamil Kalaivan School principal and social worker A. Thangavelu accepted this challenge and yesterday provided rice bags to the people lost their livelihood and successfully fulfilled the Rice Bucket Challenge.

He request all Tamil principals, teachers, students to fulfill this challenge and be a role model for the people. He provided 10 kg of rice bucket to people living in Kaithady and Nunavil area who have been displaced for a long time from Vasavilan under the temporary housing projects.

# ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற மன்னார் ஊடகவியலாளர்

தமிழ் சி.என்.என். ஆரம்பித்து வைத்த ரைஸ் பக்கட் சவாலை ஏற்ற மன்னார் மாவட்ட பிரபல ஊடகவியலாளர் எஸ்.ஆர். லெம்பேட், 10 கிலோ அரிசியினை வழங்கி இச்சவாலினை சிறப்பாக நிறைவேற்றி உள்ளார். மேலும், மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வட மாகாண சபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர் கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு 'ரைஸ் பக்கெட்' சவாலையும் அவர் விடுத்தார்.





# Mannar journalist S.R. Lambert accepted the Tamilcnn's "Rice Bucket Challenge"

The famous Mannar district journalist S.R. Lambert accepted this challenged and accomplished it by providing 10 kg of rice. Journalist S.R. Lambert asked the Provincial Council members of Mannar district, Mannar district representatives, local government chairmen, vice chairmen, member to accept the "Rice Bucket Challenge".

# றைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற சிவசக்தி ஆனந்தன் எம்.பி

தமிழ் சி.என்.என் இணையத்தின் அரிசி பக்கெட்டுக்களை வழங்கும் உதவித்திட்ட நிகழ்ச்சியில், கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பங்கேற்றார்.

வவுனியா நெடுங்கேணி நயினாமடு கிராமத்தில் மீளக் குடியேறி வாழ்வாதாரமின்றி மிகவும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசித்து வரும் விஜயசுந்தரம் இந்திராணி மற்றும் அனுராஜீலியன் கலைவாணி ஆகிய இரு குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ கிராம் நிறையுடைய அரிசி பைகளை வழங்கி வைத்துள்ளார்.



# Sivashakti Anandan MP took up the Tamilcnn's Challenge

Vanni district Parliamentarian Sivashakti Anandan participated in this challenge.

He provided 10kg of rice baggage to two families living below poverty line and have been resettled in Nainamadu village in Nadunkerny in Vavuniya.

The two families who recieved the rice bags were Vijayasundaram Indrani and Anurajiliyan Kalaivani.

He asked the representatives of people, social activists, humanitarians to participate in this welfare challenge and provide help to the families who have lost their breadwinner during the deadly war.



# சவாலை நிறைவேற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

தமிழ் சி.என்.என் இன் றைஸ் பக்கெட் சவாலினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்று கிளிநொச்சி மாவட்டத்தின் உமையாள்புரத்திலுள்ள வாழ்வாதாரத்தை இழந்த வாடும் இரண்டு குடும்பங்களுக்கு தலா 10 கிலோ எடையுள்ள இரு அரிசிப் பக்கெட்டுக்களை வழங்கி வைத்தது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட விநியோக செயற்பாட்டின் போது ஆசிரியர் சங்கத்தின் சிரேஸ்ட ஆலோசகர்களான த.மகாசிவம், திருமதி மகேந்திரா, பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன், நிருவாகச் செயலாளர் க.நல்லதம்பி உள்ளிட்ட சங்கப் பிரமுகர்கள் ஆகியோர் இணைந்து அரிசிப் பொதிகளினை வழங்கி வைத்தனர். மேலும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சவாலை ஏற்று வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் இணைந்து அரிசிப் பக்கெட் சவாலை நிறைவேற்ற முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# Ceylon Tamil Teachers Union accomplished the Challenge

Teachers have been the turning point in most of the people life. The Ceylon Tamil Teachers Union have accepted the Tamilcnn's Rice Bucket Challenge and accomplished it by providing two 10 kg of rice bags each to two poverty stricken families residing in Umaiyalpuram in Kilinochchi district.

Ceylon Tamil Teachers Union Chairman V.R. Sagathevarajah organized and the rice bag was delivered by the Teachers Union Senior advisors T.Mahasivam, Mrs. Mahindra, General Secretary Sarah Buvaneswaran, executive secretary K. Nallathambi and other members of the union.

Ceylon Tamil Teachers Union requested all the north-east Tamil speaking teachers and school teachers to participated in the Tamilcnn's Rice Bucket Challenge.

# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய ரவிகரன்

தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை, வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிறைவேற்றினார். முல்லைத்தீவு செல்வபுரம் மற்றும் சிலாவத்தையைச் சேர்ந்த மிகவும் வறுமை நிலையிலுள்ள 6 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ வீதம் அரிசி பொட்டலங்களை அவர் வழங்கினார்.

அப்போது, ''யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் எம் மக்களின் வாழ்வானது என்றுமில்லாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. எம் அரசியல் இருப்பு கடும் சவால்களைச் சந்தித்துள்ள நிலையில், பொருளாதாரமும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் தலையாய கடமை எம்மை சார்ந்திருக்கின்ற அதே வேளை, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பவும், கல்வி வளர்ச்சியை மேம்படுத்தவும், அவர்களின் வறுமை நிலையை நீக்கவும் போராட வேண்டிய கடப்பாடும் நம்மை சார்ந்துள்ளது.

இந்நிலையில் தமிழ் சி.என்.என் செய்தி ஊடகத்தின் சமூகப் பொறுப்பு வாய்ந்த இந் நடவடிக்கையைப் பாராட்டுகிறேன். மக்களின் பசியைப் போக்குவதற்கான செயற்திட்டத்தில் எழுச்சியை ஏற்படுத்தவல்ல இந் நடவடிக்கையை மனதார வாழ்த்துகிறேன்'' என்று அவர் கூறினார்.









## Ravikaran accepted the Tamilcnn's Rice Bucket challenge and provide 10kg rice bags to 6 families

The northern provincial council member Thurairasah Ravikaran yesterday evening provided 10 kg of rice to each of the 6 families below the poverty line in Selvapuram and Silawaththai in Mullaitivu.

He said in this regards, In the post-war period our people life have been hit by a unprecedented level. We are currently facing the severe challenge of political reverse and our economy has also been affected badly.

Meanwhile, due to the current drought situation, the economic condition of our people have gone even worst. Many families are facing the hardship of getting a day meal also.

In such situation, we appreciate the Tamilcnn for taking up such a social responsibility. We heartily congratulating them for bring up such a plan to relief the hunger of poor people. All people with good hearts should take up this challenge, he said.

# தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற சண் மாஸ்டர்



தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலில் மனித உரிமை செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான சண் மாஸ்டர் பங்கேற்றார். வவுனியா கல்மடுவில் அமைந்துள்ள முல்லைக் குளம் கிராமத்தில் மிகவும் வறுமையில் வாடும் குடும்ப மொன்றிற்கு 10 கிலோ அரிசியை வழங்கி வைத்தார்.

இத் திட்டம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், "வறுமையை ஒழிப்பதை இலக்காக வைத்து முன்நகர்த்தப்படும் திட்டங்களில் நாம் ஒவ்வொருவரும் பங்கு கொள்ள வேண்டியது எமது தார்மீக கடமை. இவ்வாறான சூழலிலே சந்தர்ப்பம் அறிந்து தமிழ் சி.என்.என் இன் இணையத்தளத்தினால் முன் னெடுக்கப்படும் ரைஸ்பக்கெட் சவாலில் வடமாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கடற்றொழில் அமைச்சர் ப.டெனீஸ்வரன் ஆகியோரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்ட நிதியத்தின் திட்ட இணைப்பாளரும் சமூக செயற்பாட்டாளருமான நவநீதன் ஆகி யோர் இச் சவாலில் இணைந்து கொண்டு இத் திட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டுமென அவர் உரிமையுடன் வேண்டிக் கொண்டதோடு மனிதாபிமான சிந்தனையுள்ள ஒவ்வொருவரும் இச் செயற்றிட்டத்தில் பங்காளிகளாக மாறவேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார்.

## Sun Master took part in Tamilcnn's Rice Bucket Challenge

A human rights activist and a writer Sun Master respected this agenda and handed over 10kg of rice to a poverty stricken family in Mullaikkulam village of Kalmadu in Vavuniya district. He said the following,

After war, the rice price in the country has crossed to 100 rupees, because of which there is increase in poverty. On the other side, the government is creating reservoirs of floating markets. At this stage, it is a moral duty of each and everyone to take part in a program to eradicate poverty. In particular people resettled in Vanni regions are still struggling to gain economic development. Being aware of this situation, the Tamilcnn has organized Rice Bucket Challenge.

He appealed that the Northern Provincial Chief Minister C.V.Vigneswaran, Education Minister T.Gurukularajah, Health Minister P.Sathyalingam, Minister of Agriculture P. Ayngaranesan, Fisheries Minister B.Deniswaran, United Nations Development Program, the Fund's Project Coordinator, Social activist Navaneethan should accept this challenge with humanitarian thoughts and strengthen this program.

# சவாலை நிறைவேற்றிய வவுனியா காணாமல் போனோர் சங்கத் தலைவி




தமிழ் சி.என்.என். ஆரம்பித்து வைத்த ரைஸ் பக்கட் சவாலில், அனைவரது கவனத்தையும் ஈர்த்து எல்லோரையும் இச் செயற்திட்டத்தில் பங்கு கொள்ள வைக்கும் நோக்கோடு தனது பொருளாதார கஸ்டத்தின் மத்தியிலும் வவுனியா மாவட்ட காணாமல்போனோர் சங்கத் தலைவி பேரின்பராசா பரமேஸ்வரி பங்கேற்று தான் வசிக்கும் வவுனியா மாவட்ட கல் மடுக் கிராமத்தில் மிகவும் வறுமையில் வாடும் குடும்பம் ஒன் றிற்கு 10 கிலோ அரிசி பொதியை வழங்கி வைத்தார்.

இன்று ஒரு வேளைச் சாப்பாட்டிற்கே அரிசி வாங்க முடியா மல் என்னைப் போன்ற பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பல்வேறு கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். உண்மையிலே எனது கணவர் காணாமல் போனதிலிருந்து இன்று வரை எனது பிள்ளைகளை படிப்பிப்ப தற்கும் சாப்பாட்டிற்கு பல்வேறு கஸ்ரங்களை அனுபவிக்கின் றேன். என்னைப் போன்ற பல ஆயிரம் பெண்கள் இன்று இதே நிலை யில் தான் வாழ்கின்றார்கள். எனவே என்னைப் போன்ற பெண்களிற்கு இத்தகய திட்டங்கள் பெரிய ஆறுதலாக இருக்கும் என்று கூறியதோடு, வடமாகாணசபை உறுப்பினரான அனந்தி சசிதரனுக்கு இதனை நிறைவேற்றுமாறு சவால் விடுத்துள் ளார்.

## Vavuniya District Chairwoman of Missing persons Association Perinparajah Parameswari successfully accomplished the Tamilcnn's Rice Bucket Challenge

The Vavuniya district Missing persons Association Chairwoman Perinparajah Parameswari successfully fulfilled this challenge by providing 10kg of rice to a poverty-stricken family residing in Kalamadu Village of Vavuniya district.


The Law office of
Nathan Sritharan
Family Law
Criminal Law
Real Estate Law
Commercial Law
Power of Attorney
Affidavit
Immigration Law
Phone: 416.499.2760
305 Milner Avenue, Unit 309
Scarborough, ON. M1B 3V4

# இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் சவாலை நிறைவேற்றினார்

தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலில் ஈழத்தின் பிரபல இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் அவர்களும் பங்கேற்றுள்ளார். வவுனியா பனிச்சர் புளியங்குளம் கிராமத்தில் கணவனை இழந்து முதுமையில் வாடும் அம்மாவிடம் பத்துக் கிலோ அரிசிப் பொதியை கையளித்து உதவினார்.

''இத்திட்டமானது ஏழைகளின் பசியைப் போக்கும் ஒரு நல்ல மனிதாபிமானமுள்ள செயற்திட்டம். இந்த அம்மாவைப் போல் பல்லாயிரம் தாய்மார்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்கே அரிசி வாங்க முடியாமல் திண்டாடும் இக்காலப் பகுதியில் நாமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்பதை அனைவரும் உணர்ந்து இவர்களுக்காக புலம்பெயர்வாழ் உறவுகள் அனைவரும் உதவிக்கரம் நீட்ட முன் வரவேண்டும்'' என்று கூறியதோடு, இலங்கைக் கலைஞர்களும் இத்திட்டத்தில் பங்களிப்பை வழங்க வேண்டும் என வேண்டிக் கொண்டுள்ளார் ஜெயந்தன்.



## The famous Eelam Tamil music composer Kandappu Jeyanthan participated in Tamilcnn's Rice Bucket Challenge

The most famous Eelam Tamil music composer Kandappu Jeyanthan took part in the Tamilcnn's Rice Bucket Challenge.

Eelam Tamil music composer Kandappu Jeyanthan participated in this challenge and accomplished it by handing over 10kg rice to elder woman who lost her husband and living in Panichi Puliyankulam village in Vavuniya.

He further said about this,

This scheme to alleviate the hunger of poor people is a good humane project. Lot of elder people like this mother are living with difficulties, to get even a one day meal. So we should understand this and our diaspora relations should extend all the help possible to people in Sri Lanka. He also requested the cine artists to participate in this good work of eradicating hunger.

# ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர்

தமிழ் சி.என்.**என்.னின்** ரைஸ் பக்கெட் சவாலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினர் பரமேஸ்வரன் (மோசஸ் பாபு) கலந்து கொண்டார்.

வவுனியா பூம்புகார் பகுதியில் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வசித்து வரும் குடும்பத்துக்கு பத்து கிலோகிராம் அரிசி பையை அவர் வழங்கினார்.

வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் பசியைப் போக்கும் இந்தச் சவாலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் ஆளும்கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்களை கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



## Vavuniya Southern Tamil regional member participated in the Tamilcnn's Rice Bucket Challenge

Vavuniya South Tamil regional council member Parameswaran (Moses Babu) accepted the Tamilcnn's Rice Bucket Challenge started by the Tamilcnn's Managing Director Mr. Ahilan by providing 10 kg rice to people below poverty line.

He handed over 10kg of rice to the family living in the worst economical situation in Poompukar area in Vavuniya and fulfilled his challenge.

He also requested the Chairman of Vavuniya South Tamil Divisional Council , ruling party and opposition party members to participate in this challenge to eradicate the hunger of people who lost their livelihood.

# தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை நிறைவேற்றிய பண்டாரிகுளம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்

தமிழ் சி.என்.என். இணையதளம் முன்னெடுக்கப்பட்டு வரும் ரைஸ் பக்கட் சவாலில் கிராம மட்டத் தலைவர்கள் அனைவரையும் பங்குகொள்ள வைக்கும் நோக்கோடு பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் தர்மலிங்கம் பமீகரன் பங்கேற்று, தான் வசிக்கும் வவுனியா மாவட்ட காத்தார் சின்னக்குளக் கிராமத்தில் மிகவும் வறுமையில் வாடும் குடும்பம் ஒன்றிற்கு 10 கிலோ அரிசிப் பொதியை வழங்கினார்.

''தமிழ் சி.என்.என்.னின் இந்தச் சவாலை நிறைவேற்றிய இன்றைய நாள் எனக்கு பூரண மன நிறைவைத் தருகின்றது. இது தொடர்பில் இத்திட்டத்தை வடிவமைத்த தமிழ் சி.என்.என் இணையத்தளத்தையும் நெஞ்சார வாழ்த்துகின்றேன்'' என்று கூறிய அவர், ''வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் பங்கேற்றுக் கொள்ளுமாறு உரிமையுடன் சவால் விடுகின்றேன்'' என்றும் தெரிவித்தார்.



# Pandarikulam Rural Development Association Secretary successfully accomplished the Tamilcnn's Rice Bucket Challenge

Pandarikulam Rural Development Association Secretary Dharmalingam Pameekaran took up the Rice Bucket Challenge successfully introduced by the Tamilcnn's website Managing Director Mr. Ahilan. He successfully fulfilled the challenge by providing 10 kg of rice bag to the poverty-stricken family living in Kaththar Chinnakulam in Vavuniya district.

# தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற திருகோணமலை நகர சபை உறுப்பினரான அருள்செல்வம்

தமிழ் சி.என்.என்.னின் ரைஸ் பக்கெட் சவாலில், திருகோணமலை நகரசபை உறுப்பினர் திரு.அருள்செல்வம் பங்கேற்று வெற்றிகரமாகச் சவாலை முடித்துவைத்தார்.



# Trincomalee Urban Council member Arulselvam participated in the Tamilcnn's Rice Bucket Challenge

Rice Bucket Challenge has brought hope among the people living below poverty line who have lost their livelihoods in Trincomalee.

To give way to this good desirable challenge of eradicating hunger from the life of poor people in Trincomalee, the Trincomalee Urban Council member Sithiravelu Arulselvam took part in this challenge. He accomplished the challenge by providing 10 kg rice bag to Chinnaraman Meenakshi living in poverty in a mud hut in Gandhi Nagar near Trincomalee Urban Council area.

He humbly requested, all members of Trincomalee District Urban Council and people to take up this Rice Bucket Challenge.



# ரைஸ் பக்கட் சவாலில் பங்கேற்ற வவுனியா ஆட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன்



தமிழ் சி.என்.என்னின் றைஸ் பக்கட் சவாலில் அனைத்து ஆட்டோ உரிமையாளர்களையும் இத்திட்டத்தில் பங்கேற்க வைக்க வேண்டுமென்ற விருப்புடன் வவுனியா மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியில் வாழும் மூதாட்டி ஒருவருக்கு அரிசிப்பொதியை வழங்கி வைத்தார்.

இத்திட்டம் தொடர்பாக ரவீந்திரன் அவர்கள் குறிப்பிடுகையில்,

''இதில் குழந்தைகளும் முதியோர்களும் படும்பாட்டை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. எமது சங்கம் மாணவர்களின் கல்வி வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

இருந்த போதிலும் தமிழ் சி.என்.என் இணையத்தளத்தினால் முன்னெடுக்கப்படும் ரைஸ் பக்கட் திட்டம் ஏழைகளின் ஓர் உயிர்காக்கும் திட்டமாகவே மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது.

எனவே இத்திட்டத்தில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து ஆட்டோ உரிமையாளர்களும் பங்கேற்று மனிதநேயத்தை வெளிப்படுத்த முன்வர வேண்டுமென நான் வேண்டிக் கொள்கிறேன்'' என்றார்.

## Auto Owners Association leader Ravindran participated in the Tamilcnn's Rice Bucket Challenge

Vavuniya Auto Owners Association leader Ravindran accepted Tamilcnn Rice Bucket challenge and successfully fulfilled it by handing over a rice bag to an elderly woman residing at Kathar Chinnakulam in Vavuniya.

# திருமலையில் ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய ஆசிரியர் ரபாய்தீன் பாபு

''தமிழர், முஸ்லிம், சிங்களம் என வேற்றுமை காட்டாமல் வறுமையில் வாழும் மக்களைத் தேடி செல்வதற்கு ஆரம்ப வழியையும் - மக்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்ற இந்த வேலைத்திட்டத்தினை அனைவரும் முன் நின்று செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஆசிரியர் என்ற வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்'' என திருகோணமலை ஜாமலியா பகுதியைச் சேர்ந்த ரபாய்தீன் பாபு தெரிவித்தார்.

இவர், கண் பார்வையை இழந்து கை மற்றும் கால்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மூன்று பிள்ளைகளுடன் குடிசையில் வாழ்ந்து வரும் தக்வா நகர் முகம்மட் ரிஸ்வான் -ஆர்.ரிம்சியா தம்பதிகளுக்கு 10 கிலோ அரிசிப் பொதியை வழங்கினார்.



## The teacher Rabaitheen Babu accomplished the Challenge

Before taking care of your household, take care of neighbouring household, the Prophet Sallullahu Alaih Wasallam said. This the focus of Muslims. The Rice Bucket Challenge started by Tamilcnn's managing director Mr. Ahilan is an example for all the ethnic groups.

As a teacher standing in front of everyone he requested that all should take part in this challenge to provide livelihood without any diversity to Tamil, Muslim and Sinhalese people living in poverty. This was said by teacher Rabaitheen Babu residing Jamaliya of Trincomalee.

We are able to see that not only in Trincomalee district, but in other parts of Sri Lanka also people are living in poverty not able to buy rice for one day meal also. So he requested that we should take up the Rice Bucket challenge to help eradicate hunger from the lives of poor people. He provided the assistance to Mohammad Rizwan-R.Rimsiya couple residing in Thakva Nagar who have lost their sight, their hands, feet affected and are living in a hut with their three children.

# தமிழ் சி.என்.என்.னின் றைஸ் பக்கட் சவாலை நிறைவேற்றிய யோகேஸ்வரன் எம்.பி

தமிழ் சி.என்.என் இன் றைஸ் பக்கட் சவாலினை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், அம்பாறை மாவட்டத்தின் மிகவும் வறட்சியான சொறிக்கல் முனை கிராமத்திலுள்ள ஆறாம் கொலனியைச் சேர்ந்த மிகவும் வறுமையான ஐந்து குடும்பங்களுக்கு தலா 10 கிலோ எடையுள்ள றைஸ் பக்கட்டினை விநியோகம் செய்தார்.

கிழக்கில் றைஸ் பக்கட் சவாலினை முதன் முதலில் ஏற்ற பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் எம்.பி என்பது குறிப்பிடத்தக்கது. இம்மக்கள் மிகவும் வறுமையில் வாடிக் கொண்டிருந்தமையை நேரடியாக கண்ணுற்ற யோகேஸ்வரன் எம்.பி. ஏனையோரும் உதவ வேண்டுமென கேட்டுக்கொண்டார்.









## Yogeswaran MP accomplished the Tamilcnn's Rice Bucket Challenge



Tamil Batticaloa district TNA parliamentarian Seenithambi Yogeswaran accepted the Rice Bucket Challenge posed by Tamilcnn. He accomplished his challenge by providing 10 kg of rice bags each to the five poverty-stricken families residing in 6th Colony of drought hit Sorikkalmunai village in Ampara district.

This is the first rice bucket challenge in the east of Sri Lanka that was fulfilled by Yogeswaran MP. Directly seeing people living with such poverty, Yogeswaran asked the others also to help.

Still large number of people living in the camps needs assistance, so Tamilcnn has kindly requested Tamil diaspora to come forward and provide rice bags to the needy people in their hometown.

# ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய ஸ்ரீ ரெலோ கட்சியின் இளைஞர் அணியினர்

தமிழ் சி.என்.என். ரைஸ் பக்கெட் சவாலின்படி, ஸ்ரீ ரெலோ கட்சியின் இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் சில நலன் விரும்பிகளின் உதவியுடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கான அரிசிப்பொதிகள் வழங்கும் செயற்திட்டம் கள்ளிக்குளம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது தலா 10 கிலோ எடையுள்ள அரிசி பொதிகள் 10 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இதன் போது பயனாளிகள் நேரடியாக இளைஞர் அணியினரால் இனங்காணப்பட்டு அவர்களுக்கான அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஸ்ரீ டெலோ கட்சியின் இளைஞர் அணியின் செயற்பாட்டாளர் கார்த்திக், இளைஞர் அணியை சேர்ந்த கோகுலன், விஜி ஆகியோருடன் இளைஞர் அணியின் சிறப்பு அழைப்பின் பேரில் உதயராசா கல்வி அறக்கட்டளையின் பணிப்பாளர் ஜனகனும் பங்கேற்றனர்.











## The Youth wing of Sri TELO party accomplished the Tamilcnn's Rice Bucket Challenge

The youth wing of Sri TELO party, with the help of some well-wishers made arrangements to provide rice packages to the poverty-stricken families affected by severe drought in the village of Kallikulam. They distributed 10 kg of rice each to 10 families.

The youth wing directly visited the people, discussed the problems and provided rice bags to the victims. In this event, the Sri TELO party's Youth wing secretary Karthik, Gokulan and Viji of Youth wing, and the director of Udayarajah Education Foundation with special invitation participated.

# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலினை கிளிநொச்சியில் நிறைவேற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி

தமிழ் சி.என்.என் இணையதளத்தின் முகாமைத்துவ இயக்குனர் அகிலன் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் ரைஸ் பக்கட் இன்று பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் கிளிநொச்சியில் இடம்பெற்ற வாழ்வாதாரத்தினை இழந்த மக்களுக்கான சந்திப்பில் பங்கேற்று அரிசிப் பொதிகளினை வழங்கி வைத்தார்.

தமிழ் சி.என்.என் இன் இயக்குனர் சபையின் ஆலோசனையின் பேரில், வைத்தியகலாநிதி சிவமோகன் அவர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்வில் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஊர்ப் பிரமுகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் பங்கேற்றனர்.













## MP Suresh Premachandran accomplished the Rice Bucket Challenge

TNA spokesman and parliamentarian Suresh Premachandran participated in a meeting in Kilinochchi and handed over the rice bags to people who have lost their livelihood.

On the advice from the Tamilcnn director, Dr. Sivamohan organized an event in which TNA Vanni Parliamentarian Sivashakti Anandan, local personalities, students and public took part.













## ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்ற ஒய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்

தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலில் வவுனியா வைரவபுளியம் குளத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் திரு.பத்மதாசன் பங்கேற்றார். இவர், வவுனியா தங்க நகரை சேர்ந்த குடும்பமொன்றிற்கு 10 கிலோ அரிசியை வழங்கினார். அவர் வவுனியா மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் அனைவரையும் ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.



## Retried government officer participated in the Challenge

The retired government officer Mr. Padmadasan residing in Vairavapuliyam Kulam took up the Rice Bucket challenge posed by the Tamilcnn.

# சவாலை நிறைவேற்றிய கூட்டமைப்பின் முக்கியஸ்தரான ஜெயசிறில்


தமிழ் சி.என்.என் இன் றைஸ் பக்கட் சவாலினை அம்பாறை மாவட்டத்தில் ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் கிருஸ்ணபிள்ளை ஜெய சிறில் அவர்கள் அரிசிப் பொதிகளினை வழங்கினார்.

அம்பாறை மாவட்டத்தின் மிகவும் வறட்சியான சொறிக்கல்முனை கிராமத்தைச் சேர்ந்த மிகவும் வறுமையான இரண்டு குடும்பங்களுக்கு தலா 10 கிலோ எடையுள்ள இரண்டு றைஸ் பக்கட்டினை அவர் விநியோகம் செய்தார். கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் இவ் றைஸ் பக்கட் சவாலினை முதன்முதலில் ஏற்றவர் ஜெயசிறில் என்பது குறிப்பிடத்தக்கது.









## TNA key personality Jeyashiril accomplished the Tamilcnn's Rice Bucket Challenge in Ampara district

The Tamil National Alliance's Ampara district key member Krishnapillai Jeyasiril accepted the Tamilcnn's Rice Bucket challenge and accomplished it by handing over rice packs.

He distributed two 10 kg of rice bags each to two poverty-stricken families in the drought affected area of Sorikkalmunai village in Ampara district. This is the first time that in the east of Ampara district rice bucket challenge have been fulfilled.

MP Yogeswaran after seeing directly the poverty condition of people he requested others to help. In accordance to this Jeyasiril immediately acted and accomplished the challenge.

On 31.08.2014 Tamilcnn website's Managing Director Mr. Ahilan initiated this challenge. Today because of this numerous families who lost their livelihood have be benefited from this scheme so far.

MORTGAGE ALLIANCE

The Guardian

# THE TRUSTED MORTGAGE AGENT

## "Solution For Every Mortgage"

- I will arrange your 1st Mortgage with 5% down.
- Need a 2nd Mortgage???

"When banks say no We say yes"

@ interest rate starting from 6.99%+.



**Thayalan Gobalakrishnan**

(M12001612)

தயாளன் கோபாலகிருஷ்ணன்

**Contact: 416.575.3211**

E-Mail: thaya.gobal@gmail.com

Call me for any Mortgage Financing Questions?

*Some Terms & Conditions May Apply

# இனம், மதம், மொழி கடந்து தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சாதனை

தமிழ் சி.என்.என். இணையதளம் ஆரம்பித்த ரைஸ் பக்கெட் சவால் இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு தமிழ் சி. என்.என் ஊடாக நிறைவேற்றப்பட்ட ரைஸ் பக்கெட் சவால் குறித்து கேள்விப்பட்ட, மகாதிவுள்வெவ சிறி இந்ரா ராம விகாரையின் விஹாராதிபதி பொன்னையன் கொட உபரத்ன ஹிமி அவர்கள் இந்த செயல் திட்டத்தினை வரவேற்று அங்குள்ள எமது செய்தியாளருடன் தொடர்பினை ஏற்படுத்தி தானும் இந்த திட்டத்தில் பங்கேற்க விரும்புவதாகவும் கூறி இருந்தார்.

தனது விஹாரைக்கு அருகில் உள்ள முஸ்லிம் கிராமமான றொட்டவெவ கிராமத்துக்கு சென்று வறுமையில் வாழும் குடும்பத்துக்கும் - சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கும் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி இச்சவாலினை வெற்றிகரமாக நிறைவேற்றி வயிற்றுப் பசிக்கு இனம், மதம் ஒரு தடையல்ல என்பதனை நிரூபித்தார்.


அத்துடன் இலங்கை-மற்றும் வெளிநாடுகளின் வாழும் மக்கள் இந்த ரைஸ் பக்கெட் சவாலினை நிறைவேற்றி வயிற்று பசியை போக்க இன, மத பேதமின்றி முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

## Buddhist Thera accomplished the Tamilcnn's Challenge – Achievement beyond Race, Religion and Language

Hearing about the Rice Bucket challenge initated by the Tamilcnn, to help people who lost their livelihood in Trincomalee district, Mahativulvewa Sri Inra Rama temple president Viharatipati Ponnaiyan Koda Uparathna Himi welcomed this project and contacted our journalist and expressed his wish to participate in this project.


Accordingly he successfully accomplished the rice bucket challenge by providing rice and essential ingredients to the families below poverty line and suffering from kidney problems, who are residents in a Muslim majority village near the temple in Rottaveva.

By fulfilling this, he has proved that religion is not a barrier to fill the stomach of hungry people.









# லண்டன் தமிழரின் நிதியுதவியுடன் 50 குடும்பங்களுக்கு 500 கிலோ அரிசியினை வழங்கிய தமிழ் சி.என்.என்

தமிழ் சி.என்.என் இன் ஏற்பாட்டில் அண்மையில் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் 50 குடும்பங்களுக்கு 500 கிலோ அரிசி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் சி.என்.என் இன் இயக்குனர் சபையின் ஆலோசனையின் பேரில், கிளிநொச்சி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்திய கலாநிதி திரிலோகனாதன் அவர்களினால் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்வில் தமிழ் சி.என்.என் இணையத்தளத்தின் இலங்கைக்கான இணைப்பாளரான சசிதரன், கிருஷ்ணபுரம் மாதர் சங்கத் தலைவி எஸ். டயானா, மாதர் சங்க செயலாளர் திருமதி. பிரேமலதா, முதியோர் சங்கத் தலைவர் கறுப்பையா சின்னையா, செயலாளர் வேலுப்பிள்ளை விஜயரட்ணம், ஊர்ப் பிரமுகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் பங்கேற்றனர்.

லண்டன் வாழ் தமிழரான திரு. தீபன் ஆருஷன் அவர்களின் நிதி உதவியினைக் கொண்டே மேற்படி 50 குடும்பங்களுக்கான அரிசிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில், திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்திய கலாநிதி திரிலோகனாதன் அவர்கள் உரையாற்றுகையில்,

''தமிழ் சி.என்.என் இணையத்தளமானது இலங்கையின் வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவி வருகின்றது. தற்போது கடந்த ஒரு மாத காலமாக ரைஸ் பக்கெட் சவால் நிகழ்ச்சித் திட்டத்தை சிறப்பாக செயற்படுத்தி வருகின்றார்கள். பின்தங்கிய பகுதிகளில் கிராமம் கிராமமாக இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி முன்மாதிரியாக செயற்படும் தமிழ் சி.என்.என் இணையத்தளத்தின் நிர்வாகத்தினரை பாராட்டுகின்றேன்'' என்றார்.

# With the assistance of London Tamils , 500kg rice to 50 families provided in Krishnapuram of Kilinochchi district by Tamilcnn

In Kilinochchi Krishnapuram area, for 50 poverty-stricken families (each 10 kg of rice per family), rice distribution event was held by Tamilcnn to provide 500 kg of rice.

In accordance with the consultation from the Tamilcnn director council, Kilinochchi District Coroner Dr. Tiriloka nathan specially organized the event.

In this event, Coordinator for Sri Lanka's Tamilcnn website Sasitharan, Krishnapuram Women Association Chairwoman S. Diana, Women Association Secretary Mrs. Padmalatha, Senior Citizen Association leader Karuppaiya Chinnaiya, Secretary Velupillai Vijayrathnam, local personalities, students and other people took part. With the financial aid from the Tamil family of Mr. Deepan Arusan residing in London, rice bags were provided to 50 families.














தமிழ் சி.என்.என்
Rice Packet


தமிழ் சி.என்.என்


தமிழ் சி.என்.என்


தமிழ் சி.என்.என்


தமிழ் சி.என்.என்


தமிழ் சி.என்.என்
Rice Packet









தமிழ் சி.என்.என்








தமிழ் சி.என்.என்


ஒரே கூரையின் கீழ்
புதிய பொலிவுடன்
MJS
GOLD HOUSE
உங்கள் அனைத்து தங்க நகைகளையும்
நம்பிக்கை, உத்தரவாதத்துடன்,
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
துரித பணமாற்று
சேவை
M.J.S. MONEY TRANSFER & FASHION
Fancy Sarees | Lehenga Suits | Ladies Suits | Artificial Jewelleries
Wedding Sarees | Punjabis | Men Suits | Shirts | Gift Items
உங்கள் அனைத்து கொண்டாட்டங்களுக்கும் உகந்த உயர்தர
பட்டுப் புடவைகள், மற்றும் நவ நாகரிக ஆடை தெரிவுகள் பல......
5215 Finch Ave, East, Unit #113, Scarborough, ON M1S0C2
Tel : 416-299-1630 | Fax : 416-335-4200













தமிழ் சி.என்.என்


தமிழ் சி.என்.என்




































# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கட் சவாலினை நிறைவேற்றிய மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன்

தமிழ் சி.என்.என் இணையத்தின் 'ரைஸ் பக்கட்' சவாலினை ஆரம்பித்து வைத்ததை தொடர்ந்து தற்போது வரை வடக்கு, கிழக்கில் 5000 கிலோவுக்கு மேற்பட்ட அரிசி வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வீடுகளைச் சென்றடைந்துள்ளது.

இச்சவாலை ஏற்றுக் கொண்ட மன்னார் நகர சபையின் உறுப்பினர் என்.நகுசீன் மன்னார் உப்புக்குளம் பகுதியில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியினை வழங்கி இச்சவாலினை மிகவும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்.

''தமிழ் சி.என்.என்.இணையத்தின் 'ரைஸ் பக்கட்' சவால் என்ற இந்த உதவித்திட்டம் தொடர்ச்சியாக வெற்றியளித்து வருவதை நான் அறிகின்றேன். இச்சவாலினை அறிமுகப் படுத்திய தமிழ் சி.என்.என்.நிர்வாகத்திற்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இச்சவாலை ஏற்று ஏனைய உறுப்பினர்கள் உதவிகளை மேற்கொள்ள வேண்டும்'' என தெரிவித்தார்.





## Mannar Urban Council Member N. Nakuseen fulfilled the Tamilcnn's Rice Bucket Challenge

Mannar district journalist S.R.Lambert accepted and fulfilled this challenge. He had challenged the Mannar district representatives, northern provincial Council members, Mannar district local government chairmen and vice-chairmen, members to participated in this "Rice Bucket Challenge".

Accepting this challenge Mannar Urban Council Member N. Nakuseen fulfilled it by providing 10 kg of rice to poverty-stricken families residing in Uppakkulam village.







BMO Bank of Montreal

For all your mortgage needs

Sivacantharasa (Siva) Thurairatnam

Mortgage Specialist
Serving Greater Toronto Region
BMO Bank of Montreal
Cell: 416-476-5419
416-274-2830
sivacantharasa.thurairatnam@bmo.com



# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலை நிறைவேற்றிய சட்டத்தரணி புலேந்திரன்

தமிழ் சி.என்.என் இன் றைஸ் பக்கட் சவாலினை திருமலையின் பிரபல சட்டத்தரணி சி.புலேந்திரன் ஏற்று திருமலை மாவட்டத்தின் இன்னமும் மீள்குடியேற முடியாமல் கிளிவெட்டி அகதி முகாமில் உணவுக்கு திண்டாடிக் கொண்டிருக்கும் பத்து சம்பூர் அகதிக் குடும்பங்களுக்கு றைஸ் பக்கட்டினை விநியோகம் செய்தார்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி.ரி. சகாதேவராஜா விடுத்த அன்பான வேண்டுகோளையேற்று சட்டத்தரணி சி.புலேந்திரன் இச்சவாலை ஏற்று உறவினரான பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடாக நேரில் சென்று இதனைக் கையளித்தார்.

இம்மக்கள்மிகவும்வறுமையில்வாடிக்கொண்டிருந்தமையை நேரடியாக கண்ணுற்ற சங்கத்தினர் ஏனையோரும் இங்கு உதவவேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

# Lawyer Pulenthiran successfully accomplished the Tamilcnn's Rice Bucket Challenge at Sampoor refugee camp in Trincomalee

The famous Trincomalee district lawyer C. Pulenthiran accepted the challenge posed by Tamilcnn and accomplished it by distributing rice bags to 10 Sampoor refugee camp families who are still unable to resettle and are struggling to gain their livelihood in Trincomalee district.

Lawyer C.Pulenthiran accepted the challenge kindly issued by the Sri Lankan Tamil Teachers Union President V.R. Sahadevarajah and with his relative S. Buvaneswaran, he went directly to the camp and distributed rice bags.

The Union leader who has directly witnessed the impoverished conditions of the people, requested other families also to help.

















# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலை யாழில் நிறைவேற்றிய கிழக்குப் பல்கலைக்கழக மாணவி

கிழக்கு பல்கலைக் கழக மாணவியான செல்வி சுதர்சினி வேலாயுதம், தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலில் பங்கேற்று அதனை சிறப்பாக நிறைவேற்றினார். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வசிக்கும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பம் ஒன்றுக்கு இரவு நேரத்திலும் சிரமம் பாராது அரிசிப் பொதியினை வழங்கி வைத்தார்.

குறித்த மாணவி கருத்து தெரிவிக்கையில், ''தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலில் கல்விச் சமூகம் அதிக அளவில் பங்கேற்க முன்வர வேண்டும்.

வாழ்வாதாரத்தை இழந்து வாடும் எம் மக்களுக்கு நாங்கள் தான் உதவ வேண்டும். வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் ஒவ்வொரு வீட்டு வாசல்களுக்கும் அரிசிப் பொதிகள் சென்றடைய வேண்டும் என்ற தமிழ் சி.என்.என் இன் இலக்கு நிறைவேற எனது வாழ்த்துக்கள்'' என்றார்.





# Eastern University Student accomplished the Tamilcnn's Rice Bucket Challenge

Eastern University student Ms.Sudharshini Velayutham took up the Rice Bucket challenge posed by the Tamilcnn and successfully accomplished it.

She provided the rice bag to poverty-stricken family residing in Kasthuriyar Street in Jaffna.

# வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ் சி.என்.என்.னின் சவாலை நிறைவேற்றினார்

தமிழ்.சி.என்.என். இன் இணையத்தளத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வலி வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமில் தங்கியுள்ள சுமார் ஐம்பது குடும்பங்களுக்கு தமிழ்.சி.என்.என்.னின் ரைஸ் பக்கட் சவாலை நிறைவேற்றும் வகையில் வடக்கு மாகாண முதலமைச்சரினால் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 253 குடும்பங்கள் வசித்து வரும் இம்முகாமில் மிகவும் வறிய நிலையிலுள்ள பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட 50 குடும்பங்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு உணவுக்கான அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் சி.என்.என் இயக்குனர் சபையின் ஆலோசனையின் பேரில் தமிழ் சி.என்.என் செய்திக் குழுமத்தின் சொந்த நிதியில் இருந்தே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம், வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் சோ.சுகிர்தன், தமிழ் சி.என்.என் இன் இலங்கைக்கான இணைப்பாளர் சசிதரன், யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் நிஷாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவால் தொடர்பில் கருத்து தெரிவித்த முதலமைச்சர் விக்கினேஸ்வரன், “வாழ்வாதாரத்தை இழந்த மக்களின் வாசல்களைத் தேடி உதவும் தமிழ் சி.என்.என் செய்தி இணையத்தளத்தினை அதன் நிர்வாக இயக்குனர்கள், செய்தியாளர்களை நான் மனதார பாராட்டுகின்றேன். இப்படியான நற்காரியங்களை ஒவ்வொருவரும் செய்ய முன்வர வேண்டும். குறிப்பாக புலம்பெயர் சமூகம் இப்படியான உதவிகளை வழங்கி வைப்பதில் முன்னின்று செயற்பட வேண்டும். ஏற்கனவே புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாயகத்தில் உள்ள மக்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவி வருகின்றனர். இந்த செயற்திட்டத்தில் ஏற்கனவே எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கல்வியலாளர்கள், பொதுமக்கள் என பலரும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றமை மகிழ்ச்சியாக உள்ளது” என்றார்.






# Chief Minister Vigneswaran accomplished the Tamilcnn's Rice Bucket Challenge in Sabapathipillai Camp

The Northern provincial Chief Minister went to Chunnagam Sapapathipillai welfare camp, where people displaced from Northern Jaffna of Valigamam are residing temporarily to accomplish the rice bucket challenge posed by Tamilcnn website. He accomplished the challenge by providing rice bags to 50 families there. These arrangement were made by the Tamilcnn website.

About 253 families are living in the camp and from that about 50 poverty-stricken families where women is the breadwinner rice bags were provided. In this event, the Northern Provincial Council president C.V.K. Sivagnanam, Vali. Northern regional council head S.Sugirthan, Tamilcnn's Sri Lanka coordinator Sasidharan, former Jaffna Municipal member Nishanthan participated.

Furthermore assistance has been provided from the Tamilcnn's News Group own financial aid on advice from the Tamilcnn website Managing director. During the past 25 years, these people have been displaced and living here. They have said about their need and problem face by them to the chief minister.

Chief Minister said the following,

"I heartily appreciate the Tamilcnn news website director and his team for coming up with such a scheme of providing livelihood to people for have lost hope of improving their economy. Everyone should come forward to do such good deeds. Especially diaspora relation should be in the front lead to ensure that such assistance are being accomplished successfully. Already diaspora relation are helping in many ways for the Tamil people in homeland.

"I am very happy to see that our parliamentarians, provincial council members, academics, the general public and many people are enthusiastically taking up this rice bucket challenge to bring a small change in the life of poverty stricken people." He said.

# MARKHAM TORONTO CRICKET LEAGUE




-MTCLCRICKET -MTCLCRICKET -MTCLCRICKET YouTube -MTCLTV #MTCL20YEARS

- ✓ Life Insurance
- ✓ Mortgage Insurance
- ✓ Critical Illness Insurance
- ✓ Non-Medical Insurance
- ✓ Disability Benefits
- ✓ RRSP, RESP, Investments
- ✓ Dental & Medical Plans
- ✓ Group Benefit
- ✓ Travel Insurance
- ✓ Super Visa Insurance

## Become a professional insurance advisor

- Start your own business
- Work Full time or Part time
- Unlimited income potential
- Free Office space for Full time Advisors
- Join us to become MDRT qualified Advisors

## Success is waiting!
# START NOW!




A simple solution in a
critical situation

Call Today


**Jelan Arumuganathan**
**416-206-2266**


Compare Life Insurance Rates From Leading Companies

La Capitale · Industrial Alliance · Canada Life · Manulife Financial · BMO Insurance · Assumption Life · Sun Life Financial · Desjardins




























# தமிழ் சி.என்.என் இன் ரைஸ் பக்கெட் சவாலினை நிறைவேற்றிய குச்சவெளி பிரதேச சபைத்தலைவர்

தமிழ் சி.என்.என் இணையத்தளத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் ரைஸ்பக்கட் சவாலினை நிறைவேற்றிய குச்சவெளி பிரதேச சபைத்தலைவர் கருத்து தெரிவிக்கையில், ''தமிழ், முஸ்லிம் என வேற்றுமையின்றி முன்னெடுத்து செல்வேன் என நம்பிக்கையுடன் நீங்களும் உங்கள் நண்பர்களுக்கு தெரியப் படுத்தி இதனை செய்ய முன்வர வேண்டும் எனவும் வேண்டு கோள் விடுக்கின்றேன். பகல் சாப்பிட்டால் இரவு சாப்பிட முடியாமல் ஒருவேளை உணவுக்கே தவித்துக் கொண்டிருக்கும் மக்கள் நலன் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் உதவுவதற்கும் முன்வர வேண்டும்'' என வேண்டுகோள் விடுத்தார்.



## Kuchchaveli Divisional Secretariat Chairman accomplished the Tamilcnn's Rice Bucket Challenge

Kuchchaveli Chairman said the following after accomplishing the challenge, without seeing the differences whether he is a Tamil or Muslim, we all should come forward and take up this challenge for a good purpose. When people are searching work for earning daily bread, the drought and poverty are making the situation even worst for them.

When people are suffering to even get a day meal, in such a situation this challenge program is a light in darkness and he appealed all to participate and support this challenge.

According to the need of the situation, Tamilcnn network is understanding and providing food for the hungry people, for which he heartily thanked.

# யாழ். நாவாந்துறையில் வறிய குடும்பத்துக்கு அரிசிப் பொதிகளை வழங்கிய நிஷாந்தன்

ஏழைகளின் **பசி தீர்க்கும்** ரைஸ் பக்கட் சவாலினை ஏற்றுக் கொண்ட யாழ் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும், சமூக **சேவையாளரும், அரசியல் செயற்பாட்டாளருமான நிஷாந்தன் அவர்கள் யாழ்ப்பாணம் நாவாந்துறை பிரதேசத்தில் போரினால் இடுப்புக்கு கீழ் இயங்காத நிலையில் வாழும் குடும்பத்** தலைவரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு அரிசிப் பொதியினை வழங்கினார்.



## Nisanthan provided rice bags to poverty family still bearing the scars of war in Navanthurai in Jaffna

The Managing director of Tamilcnn website Mr. Ahilan has started a Rice Bucket Challenge to eradicate the hunger of poor people by providing rice bags. Several people have participated in this challenge.

This program has brought hope among people living in poverty and people without any ethnic or religious difference have participated in this challenge of providing rice bags to poor people.

Former member of the Jaffna Municipal council, social worker, political activist Nisanthan handed over the rice bag to one of the family head who has been paralyzed from waist to toe during the war time and living in poverty in Navanthurai in Jaffna.

# பட்டினியால் வாடும் குடும்பங்களின் நிலை கண்டு கண்ணீர் விட்ட சிவாஜிலிங்கம்

ஏழைகளின் பசி தீர்க்கும் ரைஸ் பக்கட் சவாலில் முள்ளிவாய்க்கால் மண்ணில் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் பங்கேற்று மக்களுக்கு அரிசிப் பொதியை வழங்கி வைத்தார்.

முள்ளிவாய்க்கால் பயணம் தொடர்பிலும் தமிழ் சி. என்.என் இன்ரைஸ்பக்கெட்சவால்தொடர்பிலும்அவர்குறிப்பிடுகையில், ''இங்கு தொழில்வாய்ப்பு இன்மையாலும் பொருட்களின் விலைவாசி அதிகரித்துள்ளதாலும் நாளாந்த உணவுத் தேவைக்காக இங்குள்ள மக்கள் பல்வேறு கஸ்டங்களை அனுபவித்துள்ளனர். இதில் குழந்தைகளும் முதியோர்களும் படும் பாட்டை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. தமிழ் சி.என்.என் இணையத்தளத்தினால் முன்னெடுக்கப்படும் ரைஸ் பக்கட் திட்டம் ஏழைகளின் ஓர் உயிர் காக்கும் திட்டமாகவே மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது.

எமது மக்களுக்கு மிகப்பெரிய மனிதப் பேரவலம் இழைக்கப்பட்ட மண்ணிலே இந்தத் திட்டத்தில் பங்கேற்பதையிட்டு நான் மனம் நிறைவடைகின்றேன்.

நான் இந்த மண்ணிலே எனது குழுவினருடன் கால் வைக்கும் போது நேரம் பி.ப 3 மணி இருக்கும். பல வீடுகளில் மதிய உணவு சாப்பிடாமல் இருந்ததை நேரடியாகப் பார்வையிட்ட நான் என்னை அறியாமலேயே அழுதுவிட்டேன்.

தமிழ் சி. என்.என். இன் றைஸ் பக்கெட் சவாலானது ஏழைகளுக்கு உணவழிப்பதை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏழைகளின் வயிற்றுக்கு உணவளிப்பது இறைவனுக்கு படையல் செய்து வழிபடுவதை விட மேலானது என்பதே சான்றோர்களின் கருத்து. அந்த வகையில் இத்திட்டத்திற்கு மக்களின் ஆதரவோடு ஆண்டவனின் ஆசீர்வாதமும் கிடைத்திருப்பதாகவுமே நான் உணர்கின்றேன்.

தாயகத்தில் உள்ள எமது உறவுகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு முன்வருகின்ற புலம்பெயர் மக்களையும் இத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் தமிழ் சி. என்.என் இணையத்தளத்தின் குழுவினரையும் வடமாகாண சபை உறுப்பினர்கள் சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சார்பிலும் நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றேன்'' என்றார்.

# Shivajilingam wept seeing the situation of the hungry families in Mullivaikkaal while accomplishing Tamilcnn's Challenge

Northern provincial council member Shivajilingam accomplished the rice bucket challenge by handing over rice bags to people living in Mullaikkaal.

He said more on this,





I am satisfied that I have fulfilled such a good human duty of changing the life of people in our own soil a small way.

It was about 3:00 pm went I set out with my team members. Without knowing I broke in tears seeing the site of people during lunch time at their homes. Here the situation of the people were worst. Tamilcnn have brought this challenge with the aim to provide food to the poor people.

Feeding a hungry people is a greatest deed than offering food to Lord, this has been told in religious books. By taking up this project to support our people we will get the blessing of God. To help our relations at homeland the Diaspora are taking various steps and specially for Tamilcnn website on behalf from Northern Provincial Council and TNA I heartily thank them.











# தமிழ் சி.என்.என் இன் அரிசிப் பொதிகளை நேரடியாக வழங்கிய கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன்

தமிழ் சி.என்.என் இன் றைஸ் பக்கட் சவாலினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் அம்பாறை மாவட்டத்திலுள்ள நாவிதன் வெளிப் பிரிவின் ஆறாம் குடியேற்றக் கிராமத்தில் வறுமையால் வாடும் குடும்பங்களுக்கு ஐந்து அரிசிப் பொதிகளினை நேற்று வியாழக்கிழமை காலை நேரடியாக வழங்கி வைத்தார்.

இவர் அரிசிப் பொதிகளுடன் குடும்பத்திற்கு தேவையான ஒரு தொகுதி உலருணவுகளையும் சேர்த்து வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.



## Tamilcnn Rice Pack handing over event : Eastern Provincial Council Member M.Rajeswaran directly presented it

The TNA's Eastern province member M.Rajeswaran on Thursday morning handed over the rich packs for 5 poverty-stricken families residing in the sixth immigration section of Navithanveli in Ampara district and thus re-started the Tamilcnn's Rice Bucket Challenge. Along with the rice bag he also provided additional dry foods to the families.




# லண்டன் வாழ் தமிழரின் நிதியுதவியுடன் அரிசிப் பொதிகளை வழங்கிய வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர்

லண்டனைச் சேர்ந்த ஸ்கந்தகுமார் ஜனார்த்தனன் அவர்கள் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு தேவையான அரிசிப் பொதிகளினை வட மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் திரு அன்ரனி ஜெகநாதன் அவர்கள் நேரடியாக அம்மக்களுக்கு வழங்கி வைத்தார்.

அப்போது கருத்து தெரிவித்த அன்ரனி ஜெகநாதன், ''தமிழ் சி.என்.என். மக்களின் நாடித் துடிப்பறிந்து களத்தில் இறங்கி செயற்பட்டு வருகின்றது. ஒரு செய்தி நிறுவனத்தினால் தொடர்ச்சியாக வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு தேவையான உதவிகளை திறம்பட வழங்கி வருவதனை ஆச்சரியத்துடன் பார்கின்றேன். இந்த உதவிகள் அனைத்தும் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதை தமிழ் சி.என்.என் உறுதிப்படுத்திக் கொள்வதையும் கண்கூடாக பார்க்கின்றேன். எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் திடீரென குடியமர்த்தப்பட்ட இந்த மக்கள் பட்ட துன்பங்களை நாடே அறிந்தது. தொடர்ச்சியாக துன்பத்தில் உழலும் இந்தமக்களுக்கு உதவிய லண்டன் வாழ் அன்பரை நான் நெஞ்சார வாழ்த்துகின்றேன். தொடரட்டும் தமிழ் சி.என்.என் இன் மனிதாபிமானப் பணி'' என்றார்.

## With the financial aid from Tamils living in London rice bags was handed over to the people of Keppapilavu by the Deputy Chairman of the Northern Provincial Council

With the financial aid provided by London based Skanthakumar Janrthanan rice bags have provided to the 30 families belonging to the Keppapilavu village. These rice bags were directly handed over to the people by the Deputy Chairman of the Northern Provincial Council Mr. Anthony Jagannathan. This event was organized by the Keppapilavu Rural Women Development Society in collaboration with the Tamilcnn team.



















# தமிழ் சி.என்.என் இன் திருகோணமலைச் செய்தியாளரின் வீடு சென்று அரிசிப் பொதியைப் பெற்றுச் சென்ற வயோதிபப் பெண்

தமிழ் சி.என்.என் இன் அரிசிப் பொதி வழங்கும் திட்டம் குறித்து கேள்விப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் எமது திருகோணமலை மாவட்ட செய்தியாளரின் வீட்டுக்குச் சென்று தனது கஷ்ட நிலைமைகளை கூறி அரிசிப் பொதியினை கேட்டுள்ளார். இதனை உடனடியாக தமிழ் சி.என்.என் நிர்வாக இயக்குனருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, உடனடியாக அந்தப் பெண்ணுக்கு அரிசிப் பொதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



